# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **225/மா/2017**

ஆணை எண். **04/2018**

நாள் : **03/01/2018**

**திரு சி. தங்கராஜ் ஜி,**
**சேலம்**

– **முறையீட்டு மனுதாரர்**

**மாநகராட்சி ஆணையர்,**
**சேலம் மாநகராட்சி,**
**சேலம்.**

– **எதிர் மனுதாரர்**

சேலம், கோரிமேடு, எண்.112, ஹவுசிங் யூனிட், பகுதி–3, முகவரியில் வசிக்கும் திரு சி. தங்கராஜ் அவர்களின் 18.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 20.11.2017 அன்று பெறப்பட்டு, 225/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக சேலம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம், கோரிமேடு, எண்.112, ஹவுசிங் யூனிட், பகுதி–3, முகவரியில் வசிக்கும் திரு சி. தங்கராஜ் என்பவர் தான் சேலம் மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றி 31.01.2007–இல் வயது மூப்பின் காரணமாக பணி ஒய்வு பெற்றதாகத் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட பதவியில் 26.02.1984 அன்று தனக்குச் சிறப்பு நிலை ஊதிய உயர்வு வழங்கப்பட்ட நிலையில், அப்பதவியில் மேலும் 13 ஆண்டுகள் பணிபுரிந்த தனக்கு ஒரு போனஸ் ஊதிய உயர்வு வழங்கிட ஆணையிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றி ஒய்வு பெற்ற, மனுதாரரின் சக அலுவலரான துப்புரவு ஆய்வாளர் திரு R.குணசேகரன் அவர்களிடமிருந்து போனஸ் ஊதிய உயர்வு வழங்கக் கோரியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனு ஒன்று பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட திரு R. குணசேகரன் அவர்களின் முறையீட்டினை பரிசீலனை செய்த இம்முறைமன்ற நடுவம், 26.12.2017 நாளிட்ட ஆணை

எண்.302/2017–இல் இறுதி ஆணையினை வெளியிட்டுள்ளது. அவ்வாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள இம்முறைமன்ற நடுவத்தின் செயல்முறையே இந்நேர்வின் மனுதாரரின் கோரிக்கைக்கும் பொருந்தும் எனக் கருதப் படுகிறது. எனவே, திரு R. குணசேகரன் கோரிக்கை குறித்த நேர்வில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை மனுதாரர் திரு C. தங்கராஜ் அவர்களது முறையீட்டிற்கும் பொருந்துமா எனப் பரிசீலித்து, உடன் நடவடிக்கை மேற்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 3–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. மாநகராட்சி ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
சேலம் (இணைப்பு).

2. திரு சி. தங்கராஜ்,
எச்–2, ஹவுசிங் யூனிட்,
பகுதி – 3,
கோரி மேடு அருகில்,
சேலம் – 636 008 (இணைப்பு).

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி